கோயில் காவலாளி கொலை வழக்கு: மதுரை மாவட்ட நீதிபதி விசாரணை

மானாமதுரை, ஜூலை 2: சிவகங்கை மாவட்டம், மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் தனிப்படை போலீஸாரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில், மதுரை மாவட்ட 4-ஆவது முதன்மை நீதிமன்ற நீதிபதி ஜான் சுந்தர் லால் சுரேஷ் புதன்கிழமை திருப்புவனத்தில் விசாரணையைத் தொடங்கினார்.

திருப்புவனம் அருகேயுள்ள மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார் தனிப்படை போலீஸாரால் அடித்துக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக மதுரை மாவட்ட நீதிபதி விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டனர். இதன்படி, மதுரை மாவட்ட 4-ஆவது முதன்மை நீதிமன்ற நீதிபதி ஜான் சுந்தர் லால் சுரேஷ் விசாரணை மேற்கொள்வதற்காக திருப்புவனத்துக்கு புதன்கிழமை வந்தார்.

இதையடுத்து, திருப்புவனம் காவல் நிலையம் அருகேயுள்ள அரசுப் பணியாளர் விடுதிக்குச் சென்று அவர் விசாரணையைத் தொடங்கினார். அப்போது, திருப்புவனம் காவல் நிலையத்தில் பணியில் உள்ள போலீஸார், மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலில் பணியாற்றும் சில ஊழியர்களை வரவழைத்து அவர்களிடம் விசாரணை நடத்தினார்.

தொடர்ந்து வருகிற 7-ஆம் தேதி வரை திருப்புவனத்தில் விசாரணையை மேற்கொண்டு அறிக்கையை நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

'நீதி கிடைக்கும் வரை அதிமுக துணை நிற்கும்'

அஜித்குமார் குடும்பத்தினருக்கு எடப்பாடி பழனிசாமி ஆறுதல்

சென்னை, ஜூலை 2: சிவகங்கை மாவட்டத்தில் காவல் துறை விசாரணையின்போது உயிரிழந்த மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் குடும்பத்தினருக்கு தொலைபேசி மூலம் பேசி எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலருமான எடப்பாடி கே.பழனிசாமி ஆறுதல் கூறினார். அப்போது, அவரது கொலைக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுக துணை நிற்கும் என்று உறுதியளித்தார்.

அஜித்குமாரின் தாய், சகோதரர் ஆகியோரிடம் எடப்பாடி பழனிசாமி புதன்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறினார்.

அப்போது, 'துரதிருஷ்டவசமாக சிலர் கடுமையாக தாக்கியதால் அஜித்குமார் மரணமடைந்துவிட்டார். தைரியமாக இருங்கள். உங்களுக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுக துணை நிற்கும். இது மீள முடியாத துயரம். இதை யாராலும் மன்னிக்க முடியாது. ஒரு தாய் தனது மகனை இழப்பது என்பது மிகப் பெரிய கொடுமையான விஷயம். பெற்ற தாய்க்குதான் அந்த வலி தெரியும். எவ்வளவு ஆறுதல் சொன்னாலும் ஈடாகாது.

இருந்தாலும் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு மனம் நிம்மதி இருக்க வேண்டும். நாங்கள் உங்களுக்குத் துணையாக இருப்போம். மனம் தளராதீர்கள். அதிமுக சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருக்கிறோம். நீதிமன்றம் மூலம் நீதி நிலைநாட்டப்படும்' என்று தெரிவித்தார்.

நடிகர் விஜய் ஆறுதல்...

சிவகங்கை மாவட்டம், மடப்புரத்தில் உள்ள அஜித்குமாரின் வீட்டுக்கு புதன்கிழமை இரவு வந்த தமிழக வெற்றிக் கழகத் தலைவரும், நடிகருமான விஜய் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அப்போது, அஜித்குமார் தாய் மாலதியிடம் ரூ. 2 லட்சம் வழங்கினார்.

புகாரளித்த பெண்கள் மீது பண மோசடி வழக்கு

திருப்பரங்குன்றம், ஜூலை 2: சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள மடப்புரம் கோயில் காவலாளி தனிப்படை போலீஸாரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில், புகார் தாரர்களான நிகிதா, அவரது தாய் சிவகாமி அம்மாள் ஆகியோர் மீது அரசுப் பணி வாங்கித் தருவதாக பண மோசடி செய்த வழக்கு திருமங்கலம் காவல் நிலையத்தில் கடந்த 2011-இல் பதிவு செய்யப்பட்டது.

மதுரை மாவட்டம், திருமங்கலத்தை அடுத்ததிரளி பகுதியைச்சேர்ந்தவர் ராஜாங்கம். இவரிடம் திருமங்கலத்தை அடுத்த ஆலம்பட்டி பகுதியைச் சேர்ந்த ஜெயபெருமாள், அவரது மனைவி சிவகாமி அம்மாள், மகன் கவியரசு என்ற வைபவ் சரண் கவி, மகள் நிகிதா உள்ளிட்டோர் கடந்த 2010, டிசம்பர் மாதம் தங்களுக்கு அப்போதைய துணை முதல்வர் மு.க. ஸ்டாலினின் உதவியாளர் தங்களுக்குத் தெரிந்தவர் என்றும், அவர் மூலமாக தங்களது உறவினர்களுக்கு அரசுப் பணி வாங்கித் தந்ததாகவும் கூறி நம்ப வைத்தனர்.

மேலும், ராஜாங்கம் மகன் தெய்வத்துக்கு ஆசிரியர் பணி வாங்கித் தருவதாக ரூ. 9 லட்சமும், திரளி பகுதியைச் சேர்ந்த வினோத்குமாருக்கு கிராம நிர்வாக அலுவலர் பணி வாங்கித் தருவதாகக் கூறி ரூ. 7 லட்சமும் என மொத்தம் ரூ. 16 லட்சத்தை ஜெயபெருமாள் குடும்பத்தினர் வாங்கினர்.

இதனிடையே, அரசுப் பணி வாங்கித் தராததால், சம்பந்தப்பட்டவர்கள் பணத்தை திரும்பக் கேட்ட போது சிவகாமி அம்மாள் குடும்பத்தினர் கொலை மிரட்டல் விடுத்தனராம்.

இதுகுறித்து திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் ராஜாங்கம், தெய்வம், வினோத்குமார் ஆகியோர் கொடுத்த புகாரின் பேரில், ஜெயபெருமாள், அவரது மனைவி சிவகாமி அம்மாள், மகன் கவியரசு என்ற வைபவ் சரண் கவி, மகள் நிகிதா உள்ளிட்ட 6 பேர் மீது கடந்த 10.5.2011 - இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

மற்றொரு வழக்கு: மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது புகாரளித்த நிகிதா, கல்லூரியில் உதவி பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் செக்கானூரணியை அடுத்த தேங்கில்பட்டி பகுதியைச் சேர்ந்த மொக்கமாயன் மகன் செல்வம், முத்துகுமார், மணிமேகலை ஆகிய மூவருக்கும் அரசு வேலை வாங்கித் தருவதாக ரூ. 25 லட்சத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றினாராம். இந்த பண மோசடி குறித்து திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் கடந்த 2011 -ஆம் ஆண்டு சிவகாமி அம்மாள், நிகிதா, அவரது குடும்பத்தினர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

பண மோசடி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சிவகாமி அம்மாள், நிகிதா ஆகிய இருவரும் போலீஸார் தாக்கியதில் கொல்லப்பட்ட மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது நகையைத் திருடியதாக புகார் அளித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கண்துடைப்பு நாடகங்களை நடத்தும் எடப்பாடி பழனிசாமி: திமுக விமர்சனம்

சென்னை, ஜூலை 2: திருப்புவனம் விவகாரத்தில் அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி கண்துடைப்பு நாடகங்களை நடத்துவதாக திமுக விமர்சித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை: சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் இளைஞர் அஜித்குமாரின் சகோதரர் நவீன்குமாருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, கைது நடவடிக்கைக்கும் உள்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த இரண்டே நாள்களில் சட்டரீதியான பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பது தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் நிகழாதவை. அதை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றிக் காட்டியுள்ளார்.

அதிமுக ஆட்சியின்போது, சாத்தான்குளம், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் தொடர்பாக ஆணவத்தோடும், அலட்சிய மனப்பான்மையோடும் எடப்பாடி கே.பழனிசாமி பேசினார்.

அப்போது நீதி எங்கே போனது? அவரது கண்துடைப்பு நாடகங்களை யாரும் நம்ப மாட்டார்கள். நீதியை நிலைநாட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார் ஆர்.எஸ்.பாரதி.

முதல்வர் நடவடிக்கை ஆறுதல் அளிக்கிறது

மானாமதுரை, ஜூலை 2: மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் தனிப்படை போலீஸாரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில், முதல்வர் மு.க. ஸ்டாலின் எடுத்த நடவடிக்கை ஆறுதல் அளிப்பதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரத்தில் உள்ள அஜித்குமார் வீட்டுக்கு புதன்கிழமை நேரில் சென்ற தொல். திருமாவளவன், அவரது தாய் மாலதி, சகோதரர் நவீன் ஆகியோரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகம் மட்டுமன்றி, இந்தியா முழுவதும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் போலீஸாரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்படுவதை நியாயப்படுத்தவோ, அனுமதிக்கவோ முடியாது. கோயில் காவலாளி அஜித்குமார் தனிப்படை போலீஸாரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டார். சிபிஐ விசாரணைக்கு பரிந்துரைத்தார். இது முதல்வரின் நேர்மையை உறுதிப்படுத்துகிறது.

எனவே, அஜித்குமார் விவகாரத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் நடவடிக்கை ஆறுதல் அளிக்கிறது. அஜித்குமார் கொலை வழக்கை விரைவாக விசாரித்து நீதி வழங்க வேண்டும். அவரது குடும்பத்தினருக்கு தமிழக அரசு ரூ. ஒரு கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

திருப்புவனத்தில் அதிமுக-பாஜகவினர் ஆர்ப்பாட்டம்

மானாமதுரை, ஜூலை 2: சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார் காவல் துறை விசாரணையின்போது உயிரிழந்த சம்பவத்தில் நீதியை நிலைநாட்டக் கோரி, திருப்புவனத்தில் அதிமுக-பாஜகவினர் இணைந்து புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சிவகங்கை மாவட்ட அதிமுக செயலர் பி.ஆர். செந்தில்நாதன், பாஜக மூத்த தலைவர் எச். ராஜா ஆகியோர் தலைமை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் சட்டப்பேரவை எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார், முன்னாள் அமைச்சர் ஜி. பாஸ்கரன், சட்டப்பேரவை உறுப்பினர் ராஜன் செல்லப்பா, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ். நாகராஜன், எம். குணசேகரன், சிவகங்கை மாவட்ட பாஜக தலைவர் பாண்டித்துரை மற்றும் அதிமுக, பாஜக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அஜித்குமாரை தாக்கி கொலை செய்த தனிப்படை போலீஸாரை பணி நீக்கம் செய்ய வேண்டும். அவரது மரணத்தில் நீதியை நிலைநாட்ட வேண்டும். இந்த பிரச்னையை மூடிமறைக்க முயற்சிக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பதவி விலக வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் முழக்கமிட்டனர்.

காவல் நிலையத்தில் ஆட்டோ ஓட்டுநர் தாக்கப்பட்ட விடியோ: விசாரணைக்கு உத்தரவு

சமூக வலைதளத்தில் வெளியான, தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் இளைஞரை காவலர்கள் தாக்கும் கண்காணிப்பு கேமரா பதிவு.

தேனி, ஜூலை 2: தேனி மாவட்டம், தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் ஆட்டோ ஓட்டுநரை காவலர்கள் தாக்கிய கண்காணிப்பு கேமரா பதிவு சமூக வலைதளத்தில் பரவிய நிலையில், இதுகுறித்து மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் வழக்குரைஞர் ஒருவர், தான் அளித்த புகார் மனு தொடர்பாக காவல் நிலையத்தில் ஜனவரி மாதம் 14-ஆம் தேதி பதிவான கண்காணிப்பு கேமரா பதிவை வழங்கக் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு அளித்திருந்தார்.

அவருக்கு காவல் நிலைய கண்காணிப்பு கேமரா பதிவு கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்டது. இந்தப் பதிவில் இளைஞர் ஒருவரை காவல் நிலையத்துக்கு இழுத்துச் சென்று காவலர்கள் கம்பால் தாக்கி, காலால் மிதிக்கும் காட்சிகள் பதிவாகியிருந்தன. இந்தப் பதிவு விடியோ தற்போது சமூக வலைதளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. காவல் நிலையத்தில் தாக்கப்பட்ட இளைஞர் தேவதானப்பட்டி, தெற்குத் தெருவைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் ரமேஷ் என்பது தற்போது தெரியவந்தது.

இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் கூறியது: தேவதானப்பட்டியில் ஜனவரி மாதம் 14-ஆம் தேதி பொங்கல் பண்டிகை அன்று, ரமேஷ் என்பவர் பேருந்து நிறுத்தம் அருகே மது போதையில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையிலும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்திலும் செயல்பட்டார்.

இவரை போலீஸார் பிடிக்க முயன்றபோது பிரச்னை செய்தார்; காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றபோது அங்கும் மது போதையில் தகராறு செய்தார். இவரை காவல் ஆய்வாளரும், காவலர்களும் கட்டுப்படுத்தினர். பின்னர், ரமேஷ் மீது வழக்குப் பதிவு செய்து காவல் நிலைய பிணையில் போலீஸார் விடுவித்தனர்.

காவல் நிலையத்தில் ரமேஷை காவலர்கள் கட்டுப்படுத்த முயன்றபோது அவர் மீது அதிகப்படியாக பல பிரயோகம் செய்தது தற்போது தெரியவந்தது.

இதுகுறித்து விசாரித்து அறிக்கை அளிக்குமாறு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

5 பேர் பணியிட மாற்றம்: இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக, தேவதானப்பட்டி காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் அபுதல்ஹா, சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் சிவசம்பு, தலைமைக் காவலர் பாண்டி, காவலர்கள் மாரிச்சாமி, வாலிராஜன் ஆகிய 5 பேரை தேனி ஆயுதப் படைப் பிரிவுக்குப் பணியிட மாற்றம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவிட்டார்.

காவல் நிலைய ஓய்வு அறையில் பெண் எஸ்எஸ்ஐ உயிரிழப்பு

காமாட்சி

ராசிபுரம், ஜூலை 2: நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தை அடுத்த பேளுக்குறிச்சி காவல் நிலைய சிறப்பு பெண் உதவி ஆய்வாளர், காவல் நிலைய ஓய்வு அறையில் உயிரிழந்தது குறித்து போலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

பேளுக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணியாற்றியவர் காமாட்சி (48). ராசிபுரம் காவலர் குடியிருப்பில் தங்கியுள்ள காமாட்சி, ஏற்கெனவே போக்குவரத்து பிரிவிலும் பணியாற்றியுள்ளார்.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை பேளுக்குறிச்சி காவல் நிலைய எல்லையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காமாட்சிக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டதால் இரவு 2 மணியளவில் ரோந்துப் பணியை முடித்துவிட்டு காவல் நிலையத்தில் உள்ள ஓய்வு அறைக்குள் சென்று கதவை தாழிட்டுவிட்டு தூங்கச் சென்றதாகக் கூறப்படுகிறது.

புதன்கிழமை காலை நீண்டநேரமாகியும் காமாட்சி வெளியேவராததால் சந்தேகமடைந்த சக காவலர்கள் அறைகதவை உடைத்து பார்த்தபோது, அவர் இறந்துகிடந்தார்.

இதையடுத்து, அவரது உடலை பிரேதப் பரிசோதனைக்காக ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்த போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். பல்வேறு உடல் உபாதைகளால் அவதிப்பட்டு வந்த இவர், மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இதனிடையே, காமாட்சி உயிரிழந்ததற்கு பணிச் சுமையே காரணம் என உறவினர்கள் குற்றம்சாட்டியிருந்தனர்.

இந்த நிலையில் நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஸ்கண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பில், பணிச்சுமை காரணமாக சிறப்பு எஸ்எஸ்ஐ காமாட்சி உயிரிழந்ததாக அவரது சகோதரி கூறியதாக சில ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. காமாட்சி கடந்த 90 நாள்களில் மருத்துவ விடுப்பு 40 நாள்கள் உள்பட மொத்தம் 46 நாள்கள் விடுமுறையில் இருந்துள்ளார். எனவே, அவர் பணிச்சுமை காரணமாக உயிரிழந்ததாகக் கூறுவது தவறானது. இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
4304-M	மே.பொ. / கொ & நி / தூ.அ.மி.நி	Supply of Diffuser for Colling Water Pumps
4306-M	மே.பொ. / கொ & நி / தூ.அ.மி.நி	Airpreheaters model 27VIT M 2000
4309-M	மே.பொ. / கொ & நி / தூ.அ.மி.நி	Safety valves wall blowers
4311-M	மே.பொ. / கொ & நி / தூ.அ.மி.நி	HOT intermediate heating elements

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/3407/ஒப்பந்தப்புள்ளி/2025

பொது அறிவிப்பு

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் State Level Environment Impact Assessment Authority (SEIAA) தமிழ்நாடு கோப்பு எண் 11315, நாள் 24/01/2025, EC identification No EC24C0108TN5322655Nன் படி, **தனபால் S/o. ஜெயதுரை** No.16D/8, ஜெய்லானி தெரு, பாளை ரோடு வடக்கு, தூத்துக்குடி மாவட்டம் தமிழ்நாடு 628008 அவர்களுக்கு புல எண்கள் **4/1A, 4/1B, 4/2** சிங்கத்தாக்குறிச்சி கிராமம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம் தமிழ்நாடு **1.81.50** ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நடத்துவதற்கு சுற்றுச்சூழல் தடையில்லா சான்று வழங்கியுள்ளது மேற்காணும் விவரத்தை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) தமிழ்நாடு இணையதளத்தில் **(https://parivesh.nic.in)** தெரிந்து கொள்ளலாம்

NOTICE

I state that I, **GRACESTON JOSHUVA**, S/o Winston Das Y, aged about 22 years, residing at No: 27/48B, at No: Sinclair Street, Paruthivilai main Road, marthandam, vilavancode, Kanniyakumari, Tamil Nadu- 629165. I state that my name is wrongly misspelled in my old Passport as **GRACETON JOSHUVA.** I state that my correct name is **GRACESTON JOSHOVA** which is mentioned in my Aadhaar Card. (Aadhaar No: **7001 4670 1730**). Here after be known as **GRACESTON JOSHUVA.**

NAME CHANGE

I, **FIGO ANTON ANTONY XAVIER ALBY**, S/o. ANTONY XAVIER ALBY, born on 11/01/2006 (Native District: Kanyakumari), residing at 24-69B, Kalingarajapuram, Vallavilai Post - 629160, Kanyakumari District, Tamilnadu, shall henceforth be known as **FIGO ANTON.**

FIGO ANTON ANTONY XAVIER ALBY

பெருநகர சென்னை மாநகராட்சி
திடக்கழிவு மேலாண்மை துறை

தி.க.மே.து.ந.க.எண்.அ7 / 2902 & 2903 / 2025

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

திடக்கழிவு மேலாண்மை துறையில் மண்டலம் 2 (மணலி) மண்டலம் 1 முதல் 8லிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் பணியினை ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் (operating and maintenance contract) பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யும் பணிக்கு ஒப்பம் கோர மேற்பார்வை பொறியாளர் (திகமே) அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம்	பணியின் மதிப்பு	முன் வைப்புத்தொகை
தி.க.மே.து.ந.க.எண்.அ7/2902/2025 உரம் தயாரிக்கும் நிலையம் Plant I	ரூ.175.46 கோடி	ரூ.1.76 லட்சம்
தி.க.மே.து.ந.க.எண்.அ7/2903/2025 உரம் தயாரிக்கும் நிலையம் Plant II	ரூ.175.46 கோடி	ரூ.1.76 லட்சம்

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள் : **14.07.2025 பிற்பகல் 3.00 மணிக்குள்**
ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் : **15.07.2025 பிற்பகல் 4.00 மணிக்கு**

ஒப்பந்ததாரர்கள் **tntenders.gov.in** இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். முன்வைப்பு தொகை **E-Tender portal** மூலம் **online** பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும் விவரங்கள் ஒப்ப ஆவணம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3384 / ஒப்பந்தப்புள்ளி / 2025

மேற்பார்வை பொறியாளர் (திகமே)

தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு விஜராகவப்பெருமாள் திருக்கோயில்
திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்
இணையவழி - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.01/2025 நாள் - 01.07.2025
ஒப்பந்த வகை : LUMPSUM

அருள்மிகு விஜயராகவப்பெருமாள் திருக்கோயில், திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம், செயல் அலுவலர் அவர்கள், திருக்கோயிலில் கீழ்காணும் பணிக்கு தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற நடப்பில் உள்ள திருக்கோயில் திருப்பணிகளின் அனுபவம் வாய்ந்த ஸ்தபதி / சிற்பிகளிடமிருந்து தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் **(https://tntenders.gov.in)** - மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வ. எண்.	வேலையின் பெயர்	பணியின் தோராய மதிப்பு-ரூ.	முன் வைப்புத் தொகை-ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்	முன் வைப்புத் தொகை வழங்க வேண்டிய பெயர்
1.	காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம் திருப்புட்குழி கிராமம், அருள்மிகு விஜயராகவப்பெருமாள் திருக்கோயிலில் பழுது பார்த்து புதுப்பித்தல் பணி	67,26,240/-	43,700/-	9 மாதங்கள்	செயல் அலுவலர், அருள்மிகு விஜயராகவப்பெருமாள் திருக்கோயில், திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்

முக்கிய நாட்கள்
1. இணைய வழியில் இலவசமாக ஒப்பந்தப்புள்ளிகளை தரவிறக்கம் செய்ய : 04.07.2025 முதல் 22.07.2025 பிற்பகல் 02.00 மணி வரை
2. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை தரவேற்றம் செய்ய : 22.07.2025 பிற்பகல் 02.00 மணி வரை
3. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும் நாள் மற்றும் நேரம் : 22.07.2025 பிற்பகல் 03.00 மணிக்கு

முக்கிய விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் (https://tntenders.gov.in)-ல் மட்டுமே பெறவேண்டும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.

செயல் அலுவலர், அருள்மிகு விஜயராகவப்பெருமாள் திருக்கோயில், திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்

செ.ம.தொ.இ/3397/ஒப்பந்தப்புள்ளி/2025

JM FINANCIAL

JM ஃபைனான்ஸியல் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அடையாள எண்: U67190MH2007PLC74287
பதிவு அலுவலகம்: 7வது தளம், சினர்ஜி, அப்பா சாஹேப் மராத்தே மார்க், ப்ரபாதேவி, மும்பை - 400 025. இணையதளம் : www.jmfinancialarc.com
தொடர்பு நபர்: 1. அமர்நாத் G -7397715500, 2. விஜய் பிரபாகர் - 9095320032, 3. ரோஹன் சாவந்த் - 9833143013, 4. சிந்துஜா பிள்ளை - 022-6224 1676

E- ஏல விற்பனை அறிவிப்பு-பிந்தைய விற்பனை

பிரமல் கேபிடல் அண்ட் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு "திவான் ஹவுசிங் அண்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்" என அறியப்பட்டது) -ஆனது 2023 மார்ச் 29 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் படி, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") ன் பிரிவு 5(1)(b) கீழ், பல்வேறு கடன் கணக்குகளை (இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குகள் உட்பட) மற்றும் அவற்றின் வைக்கப்பட்ட கடனுக்கு ஈடான சொத்துகள், அவற்றின் அனைத்து உரிமைகள், பத்திர உரிமைகள் மற்றும் அவற்றின் வட்டி உட்பட JMFARC - Ananya -Trust-ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் JMFARC (JM) க்கு (இனிமேற்கொண்டு "பணி ஒப்படைவு பெற்றவர்" என்றே அழைக்கப்படும்) பணி ஒப்படைவு செய்துள்ளது. PCHFL ஆனது பணி ஒப்படைவு / சேவை ஒப்பந்தம் மூலம் அனைத்து செயல்பாடுகள் மற்றும் செயல்முறைகளுக்கும் உதவும் பொருட்டு, சேவைதாரராக / வசூல் முகமையாக செயல்பட அங்கீகரிக்கப்பட்டு, பணியமர்த்தப்பட்டுள்ளது.

கடன்தாரர்/களிடமிருந்து நிலுவைத்தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஜாமீன் சொத்துக்கள், அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழ், சுவாதீனம் எடுக்கப்பட்டதை தொடர்ந்து, இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபரால், சுவாதீனம் (POSSESSION) பெறப்பட்டுள்ள இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்தை "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இதன் விபரங்களாவன கீழ்க்கண்டவாறு:-

கடன் குறியீடு / கிளை/ கடன்தாரர்(கள்) / கூட்டு-கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	அசையா சொத்து விபரம்-இறுதி	அடிப்படை விலை	டெபாசிட் தொகை-EMD, (அடிப்படை விலையில் 10%)	நிலுவைத்தொகை (25.06.2025-ம் தேதியின் படி)
கடன் குறியீடு எண்:31700000001, நாகர்கோயில் (கிளை), **ராபர்ட் M (கடன்தாரர்), பாலசந்திரா D (இணை கடன்தாரர் 1)**	தேதி:21-10-2021, ரூ.26,52,933/- (ரூபாய் இருபத்தாறு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு ச.எண் 175/2A, வடக்கு தெரு, ஜேக்கோபுரம் PO பின்னவர் குடியிருப்பு, புதூர் கிராமம் அவரைக்குளம் பஞ்சாயத்து ராதாபுரம், திருநெல்வேலி தமிழ்நாடு 627114 **எல்லைகள்: வடக்கு:** ரெஜினா காசி நிலம் **தெற்கு:** தெரு **கிழக்கு:** விற்பனையாளரின் நிலம் **மேற்கு:** விற்பனையாளரின் நிலம்.	ரூ.20,10,000/- (ரூபாய் இருபது லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	ரூ.20,1000/-, (ரூபாய் இரண்டு லட்சத்து ஆயிரம் மட்டும்)	ரூ.40,76,323/-, (ரூபாய் நாற்பது லட்சத்து எழுபத்தாறாயிரத்து முந்நூற்று இருபத்து மூன்று மட்டும்)
கடன் குறியீடு எண்:03300002854 & 03300004097, திருநெல்வேலி (கிளை), **ஆனந்த பெருமாள் S (கடன்தாரர்), சாந்தி S (இணை கடன்தாரர் 1)**	தேதி:11-10-2018, ரூ.9,40,772/- (ரூபாய் ஒன்பது லட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்று எழுபத்திரண்டு மட்டும்) & தேதி:11-10-2018, ரூ.3,65,713/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து எழுநூற்று பதின்மூன்று மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு ச எண் 561/1AW9 ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் வடக்கு தெரு கீழக்குளம் வீரவநல்லூர் டவுன், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி-627 426 **எல்லைகள்: வடக்கு:** V.R. கிருஷ்ணன் சொத்து வீடு **தெற்கு:** புஷ்பம் வீடு **கிழக்கு:** வடக்கு தெற்கு சந்து **மேற்கு:** வடக்கு தெற்கு பொதுவான பாதை	ரூ.17,30,000/-, (ரூபாய் பதினேழு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்)	ரூ.1,73,000/-, (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து மூவாயிரம் மட்டும்)	ரூ.26,34,239/- (ரூபாய் இருபத்தாறு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது மட்டும்) & ரூ. 9,18,413/- (ரூபாய் ஒன்பது லட்சத்து பதினெட்டாயிரத்து நானூற்று பதின்மூன்று மட்டும்)

E-ஏலத் தேதி 22-07-2025, காலை 11.00 மணி - பிற்பகல் 1.00 மணி (வரம்பற்ற தலா 5 நிமிட நேர நீட்டிப்புடன்) விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி- 21.07.2025 மாலை 04.00 மணிக்கு முன்பு.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் https://www.jmfinancialarc.com/Home/Assetforsale அல்லது https://www.bankauction.in ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சட்டப்பூர்வமான 15 நாட்கள் கெடு விற்பனை அறிவிப்பு.

பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகை முழுவதையும் ஏல தேதிக்கு முன்பு வரை சேர்ந்து வரும் வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில், சொத்து ஏலம் விடப்பட்டு / இவ்வாறு செய்யப்படுவதோடு, மீதி நிலுவை ஏதேனும் இருப்பின் அது வட்டி மற்றும் செலவுகளுடன் கடன்தாரர் / ஜாமீன்தாரரிடமிருந்து வசூலிக்கப்படும் என இதன் மூலம் இதன் மேற்குறிப்பிட்ட கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரருக்கு அறிவிக்கப்படுகிறது.

ஒப்பம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்) (ஆரண்யா-ட்ரஸ்ட்)

தேதி:03.07.2025, இடம்:ROTN

JM FINANCIAL

JM ஃபைனான்ஸியல் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அடையாள எண்: U67190MH2007PLC74287
பதிவு அலுவலகம்: 7வது தளம், சினர்ஜி, அப்பா சாஹேப் மராத்தே மார்க், ப்ரபாதேவி, மும்பை - 400 025. இணையதளம் :www.jmfinancialarc.com
தொடர்பு நபர்: 1. அமர்நாத் G -7397715500, 2. விஜய் பிரபாகர் - 9095320032, 3. சந்தன் சகல்கர்- 9820407168 4. சிந்துஜா பிள்ளை- 022-6224 1676

E- ஏல விற்பனை அறிவிப்பு - முதல் விற்பனை

பிரமல் கேபிடல் அண்ட் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு "திவான் ஹவுசிங் அண்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்" என அறியப்பட்டது) -ஆனது 2023 மார்ச் 29 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் படி, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") ன் பிரிவு 5(1)(b) கீழ், பல்வேறு கடன் கணக்குகளை (இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குகள் உட்பட) மற்றும் அவற்றின் வைக்கப்பட்ட கடனுக்கு ஈடான சொத்துகள், அவற்றின் அனைத்து உரிமைகள், பத்திர உரிமைகள் மற்றும் அவற்றின் வட்டி உட்பட JMFARC - Ananya -Trust-ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் JMFARC (JM) க்கு (இனிமேற்கொண்டு "பணி ஒப்படைவு பெற்றவர்" என்றே அழைக்கப்படும்) பணி ஒப்படைவு செய்துள்ளது. PCHFL ஆனது பணி ஒப்படைவு / சேவை ஒப்பந்தம் மூலம் அனைத்து செயல்பாடுகள் மற்றும் செயல்முறைகளுக்கும் உதவும் பொருட்டு, சேவைதாரராக / வசூல் முகமையாக செயல்பட அங்கீகரிக்கப்பட்டு, பணியமர்த்தப்பட்டுள்ளது.

கடன்தாரர்/களிடமிருந்து நிலுவைத்தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஜாமீன் சொத்துக்கள், அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழ், சுவாதீனம் எடுக்கப்பட்டதை தொடர்ந்து, இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபரால், சுவாதீனம் (POSSESSION) பெறப்பட்டுள்ள இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்தை **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இதன் விபரங்களாவன கீழ்க்கண்டவாறு:-

கடன் குறியீடு / கிளை/ கடன்தாரர்(கள்) / கூட்டு-கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	அசையா சொத்து விபரம்-இறுதி	அடிப்படை விலை	டெபாசிட் தொகை -EMD, (அடிப்படை விலையில் 10%)	நிலுவைத்தொகை (25.06.2025-ம் தேதியின் படி)
கடன் குறியீடு எண்:03300005886, திருநெல்வேலி (கிளை), **அபிரகஸ்தான் வத்துரனாயுத்தர் (கடன்தாரர்), அபிதா A (இணை கடன்தாரர் 1)**	தேதி:13-06-2023, ரூ.73,39,183/-, (ரூபாய் எழுபத்து மூன்று லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து நூற்று எண்பத்து மூன்று மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு D.No:378, S. No:700/8A1A, T.S.No:116/2, சமீது குருக்கள் பள்ளிவாசல் தெரு தென்காசி நகராட்சி திருநெல்வேலி மாவட்டம் தமிழ்நாடு 627 811 **எல்லைகள் வடக்கு:** சமீது வீடு **தெற்கு:** பொதுவான பாதை **கிழக்கு:** முகமது சமீது, சமீது அசமது மற்றும் பிறர் சொத்து, **மேற்கு:** A.R. கருனா முகமது வீடு	ரூ.65,00,000/- (ரூபாய் அறுபத்து ஐந்து லட்சம் மட்டும்)	ரூ.6,50,000/-, (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ரூ.1,09,76,747/-, (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து எழுபத்தாறாயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு மட்டும்)
கடன் குறியீடு எண்:03300003337, திருநெல்வேலி (கிளை), **கிருஷ்ண ராமன் M (கடன்தாரர்), முத்து கிருஷ்ணன் V (இணை கடன்தாரர் 1)**	தேதி:16-06-2020, ரூ.8,44,024/- (ரூபாய் எட்டு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருபத்து நான்கு மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு கதவு எண்:2/29, S 45732 E ராமச்சந்திரா நகர் தனகர்குளம் கிராமம், ராதாபுரம் தாலுகா, திருநெல்வேலி - 627 116 **எல்லைகள் வடக்கு:** கிழக்கு மேற்கு தெரு **தெற்கு:** S.No:16/3E நிலம் **கிழக்கு:** வடக்கு தெற்கு சாலை **மேற்கு:** சண்முகம் நிலம்.	ரூ.19,40,000/-, (ரூபாய் பத்தொன்பது லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)	ரூ.1,94,000/-, (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் மட்டும்)	ரூ.16,50,954/-, (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பதாயிரம் தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்கு மட்டும்)
கடன் குறியீடு எண்:03300002741, திருநெல்வேலி (கிளை), **மீனாட்சி சுந்தரம் M (கடன் தாரர்), முருகன் S (இணை கடன்தாரர் 1)**	தேதி:13-06-2023, ரூ.7,64,953/- (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு மனை எண்: 605, S 460/1 பகுதி நா ஸ்ரீ திருமால் நகர், திருப்பணிகரிசல் குளம், கொண்டநகரம் கிராமம் திருநெல்வேலி தமிழ்நாடு 627 010, **எல்லைகள்-வடக்கு:** மனை எண்: 556 **தெற்கு:** 20 அடி அகல சாலை **கிழக்கு:** மனை எண்:606 **மேற்கு:** 30 அடி சாலை.	ரூ.10,90,000/-, (ரூபாய் பத்து லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)	ரூ.1,09,000/-, (ரூபாய் ஒரு லட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்)	ரூ.11,29,414/-, (ரூபாய் பதினொரு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து நானூற்று பதினான்கு மட்டும்)
கடன் குறியீடு எண்:03300002836, திருநெல்வேலி (கிளை), **முருகன் அபி முகேஷ் (கடன்தாரர்), முருகன் V (இணை கடன்தாரர் 1)**	தேதி:13-06-2023, ரூ.29,04,506/-, (ரூபாய் இருபத்து ஒன்பது லட்சத்து நான்காயிரத்து ஐந்நூற்று ஆறு மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு Re Sy No 212/10A பழைய Sy 4574 மஞ்சாலுமூடு கிராமம் அருமனை துணை மாவட்டம் விளவங்கோடு கன்னியாகுமரி தமிழ்நாடு:- 629 152 **எல்லைகள் வடக்கு:** அர்ஜுனன் சொத்து **தெற்கு:** செல்வகுமார் சொத்து, **கிழக்கு:** ராஜேந்திரன் மற்றும் ரெஜின் சொத்து, **மேற்கு:** சாலை.	ரூ.19,10,000/-, (ரூபாய் பத்தொன்பது லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	ரூ.191000/-, (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று ஓராயிரம் மட்டும்)	ரூ.43,35,879/-, (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து முப்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்பது மட்டும்)

E-ஏலத் தேதி 07-08-2025, காலை 11.00 மணி - பிற்பகல் 1.00 மணி (வரம்பற்ற தலா 5 நிமிட நேர நீட்டிப்புடன்) விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி- 06.08.2025 மாலை 04.00 மணிக்கு முன்பு.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் **https://www.jmfinancialarc.com/Home/Assetforsale** அல்லது **https://www.bankauction.in** ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சட்டப்பூர்வமான 30 நாட்கள் கெடு விற்பனை அறிவிப்பு.

பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகை முழுவதையும் ஏல தேதிக்கு முன்பு வரை சேர்ந்து வரும் வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில், சொத்து ஏலம் விடப்பட்டு / இவ்வாறு செய்யப்படுவதோடு, மீதி நிலுவை ஏதேனும் இருப்பின் அது வட்டி மற்றும் செலவுகளுடன் கடன்தாரர் / ஜாமீன்தாரரிடமிருந்து வசூலிக்கப்படும் என இதன் மூலம் இதன் மேற்குறிப்பிட்ட கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரருக்கு அறிவிக்கப்படுகிறது.

ஒப்பம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்) (ஆரண்யா-ட்ரஸ்ட்)

தேதி : 03.07.2025, இடம் : ROTN